[18th March 1965

திரு. டி. கார்ச்சா கவுடர் : திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் குரு ராஜாஜி, 'துக்க தினம் கொண்டாடவேண்டாம்' என்று ஆலோசனை கூறியும் அவர்கள் என் கேட்கவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்களுக்கும் தலைவர்களுக்கும் போடப்பட வேண்டும். எனக்குப் போடக்கூடாது.

திரு. காஞ்சி மணிமொழியார் : தலைவர் அவர்களே, 26-ம் தேதி யன்று தனிப்பட்டவர்களுடைய வீடுகளில் புகுந்து, அவர்கள் அனுமதி இல்லாமல் புகுந்து, அவர்கள் வீட்டின் மேலே கட்டியிருந்த கொடிகளை அறுத்துக் கொளுத்தியிருக்கிறார்களே, அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாக இம்மாதிரிக் கேள்வி போட்டால் அதற்கு ஒன்றும் பதில் அளிக்கமுடியாது.

புலவர் கா. கோவிந்தன் : 26-ம் தேதியன்று இந்தி ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டதால்தான் அன்று துக்க தினம் கொண்டாடப்படுகிறது, அதை வேறு ஒரு நாளுக்கு மாற்றியிருந்தால் குடியரசு நாள் அன்று துக்க தினம் கொண்டாடப்படமாட்டாது என்று சொல்லப்பட்டது. அம்மாதிரி அதை மாற்றச் செய்யாது இருந்த காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு ஒன்றும் காரணம் இல்லை. 26-ம் தேதி அரசியல் அமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தால் அதை மாற்ற முடியாது.

திரு. கே. ஏ. மதியழகன் : 26-ம் தேதி நுங்கம்பாக்கம் கூட்டத்தில் கலவரம் விளைவிப்பதாகவும், திப்பந்த ஊர்வலம் எடுப்பதாகவும் பகிரங்க மாக அறிவித்த காங்கிரஸ் பிரமுகர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? ஏன் அவர்களைக் கைது செய்யவில்லை என்று அமைச்சர் கூறு வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார்மீது எம்மாதிரி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது போலீஸார் பொறுப்பு. போலீஸார் தவறுதல் செய்கிறார்களா அல்லது சரியாகச் செய்கிறார்களா என்று கவனிக்கவேண்டி யது அரசாங்கத்தின் பொறுப்பு. இதில் ஒன்றும் தவறு இல்லை.

1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதியில் தி.மு. கழகத்தினர்கள் கைது

***265 கேள்வி.—திரு. செ. மாதவன், திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) 1965-ம் ஆண்டு ஜனவரி 26-ம் தேதி தமிழ்நாடு முழுவதும் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் ?

(இ) அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Two thousand two hundred and ninety-four D.M.K. persons were arrested in the State on 25th/26th January 1965 and 26th January 1965.

(*b*) Two thousand and fifty-six persons were taken into preventive custody as it was apprehended that their activities in connection with the observance of mourning day on 26th January 1965 would endanger the law and order situation and lead to breach of peace. The remaining 238 persons were arrested for specific offences.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், 25-ம் தேதி இரவு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கறுப்புக்கொடி ஏற்றிவிடுவார்கள் என்று அரசாங்கம் கைது செய்ததாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்ற

18th March 1965]

கழகத்தினர் கறுப்புக்கொடி ஏற்றுவதை அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை, ஆகையால் கறுப்புக்கொடி ஏற்றினுல் எல்லா ரௌடிகளையும் விட்டுக் கலவரம் செய்யவேண்டும் என்று அரசாங்கம் தூண்டியதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்வி அரசாங்கம் செய்ததாக. அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது செய்யப்பட்ட கைதுகள் ***ab initio illegal*** என்று கூறி சட்டமன்ற உறுப்பினர் திரு. வெ. கிருஷ்ணமூர்த்தியும் மற்றும் 10 பேர்களும் உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் போட்ட காரணத்தினுல், உடனே எல்லோரும் 2,000 பேர்களும் விடுவிக்கப்பட்டது உண்மையா ? அப்படியல்லாமல் அது எப்படி நியாயமானது என்பதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறுர்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது உண்மைக்கு முற்றிலும் மாறுனது. நிரூபிப்பதற்கு மறுபடியும் கோர்ட்டுக்குப் போகலாம் கனம் உறுப்பினர் அவர்கள்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் முதல் அமைச்சர் சொல்லுகிற நேரத்தில் 26-ம் தேதி தனிப்பட்டவர்களுடைய இல்லங்களில் கறுப்புக் கொடி ஏற்றியிருந்தால் அதை இறக்கவேண்டுமென்று போலீஸாருக்கு யாதொரு உத்தரவும் போடவில்லை என்று சொன்னுர்கள். அப்படியென்ருல், போலீஸார் ஒரு சில இடங்களிலே கறுப்புக் கொடிகளை இறக்கியிருக்கிறுர்கள். தனிப்பட்டவர்களும் இறக்கியிருக்கிறுர்கள். அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸாருக்கு பொறுப்பு இருக்கிறது. அமைதியைப் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களுடையது. அவர்கள் கடமையைச் செலுத்துகிறுர்கள். அவர்கள் தவறுதல் செய்கிறுர்கள் என்று ஏற்பட்டு, அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. தவறுதலை ஒப்புக்கொள்ளவில்லை என்ருல், தனிப்பட்டவர்கள் வழக்குகள் தொடரலாம்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஜனவரி 26-ம் தேதி லா அண்டு ஆர்டரை உத்தேசித்து 2,000 பேர்களுக்குமேல் கைது செய்யப்பட்டார்கள் என்று சொன்னுர்கள். லா அண்டு ஆர்டரை உத்தேசித்து கைது செய்யப்பட்ட காங்கிரஸ்காரர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் அதைப்பற்றித் தனிக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : திராவிட முன்னேற்றக் கழகத்தினரை வேண்டுமானுலும் கைது செய்யலாம். ஆனுல், சும்மா இருக்கக்கூடிய எத்தனையோ பேர்களையும் அனுதாபிகள் என்று சொல்லிக் கைது செய்தது நியாயமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவரவர்கள் நியாயத்தை அவரவர்கள் வைத்துக்கொள்ளலாம்.

திரு. கோ. சி. மணி : போலீஸாருக்குப் பொறுப்பு உண்டு, அமைதியைக் காக்க போலீஸார் கொடிகளை இறக்கினுர்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கொடிகளைப் போலீஸார் இறக்கியதினுல், அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாகக் கேள்வி போட்டால் எனக்கு விடை அளிக்க முடியாது. எனக்கு விவரம் தெரியாது.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : 26-ம் தேதி அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், பத்திரிகைக்காரர்கள் இப்படி பலவிதமான பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறுர்கள். அப்படிக் கைது செய்யப்பட்டவர்களில் தேசீய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ? அதில் எத்தனை பேர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள் ?

[18th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றித் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. எம். எஸ். மணி : போலீஸார் தவறு செய்தால் கோர்ட்டுக்குப் போகவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் போலீஸார் தவறு செய்கிறபொழுது போலீஸ் மேலதிகாரிகளுக்குப் புகார் செய்தால், அவர்கள் விசாரிக்க மாட்டார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அவ்வாறு சொல்லவில்லை. போலீசார் தவறு செய்து, அரசாங்கம் அது தவறு இல்லை என்று நினைத்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்றால், அப்பொழுதுதான் தனிப்பட்டவர்கள் வழக்குத் தொடரலாம் என்று சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : நாங்கள் யாரையும் கைது செய்ய மாட்டோம், மாப்பிள்ளை மாதிரி மாலை போட்டுக்கொண்டு வரலாம் என்று முழங்கிக்கொண்டிருந்த முதல் அமைச்சர் அவர்கள் இப்படி திடீரென்று 1,000 பேர்களைக் கைது செய்யவேண்டிய மாறுதல் நிலைமைக்கு வந்த காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாப்பிள்ளை என்ற வார்த்தை என்னிடமிருந்து வரவே இல்லை. கனம் அங்கத்தினர் வேண்டுமானால் நினைத்துக்கொள்ளலாம் தங்களைப்பற்றி. மாப்பிள்ளை என்று நான் சொல்லவில்லை. சொல்லமாட்டேன். என் வாயிலிருந்து அந்தச் சொல் வரவில்லை. அவ்வப்பொழுது நிலைமைக்குத் தக்கவாறு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். முதலில் கைது செய்யமல் இருக்கலாம். கொஞ்ச நாளைக்குப் பிறகு அரசாங்கத்திற்குத் தகவல் வரலாம். போலீஸாருக்கும் தகவல் வந்து அரசாங்கத்தினிடம் தெரிவிக்கலாம். அவ்வப்பொழுது கிடைக்கிற தகவலையொட்டி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

* 266 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) ராமநாதபுரம் மாவட்டம், மானமதுரை, கீழ பசலை, மேல பசலை, வண்ணிக்குடி கிராமங்களிலுள்ள அரிஜனங்கள் பால் விநியோக கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் தரும்படி, 1962-ல் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்தார்களா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை யாது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) மேற்படி நான்கு கிராமங்களில் உள்ள ஹரிஜனங்களிடமிருந்து 1962-ல் அரசாங்கத்திற்கு எந்த விதமான முறையீடும் வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(*a*) The Government did not receive any representation from the Harijans of the above four villages in 1962.

(*b*) Does not arise.

State Forensic Science Laboratory

267 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state whether medico-legal and chemico-legal examinations are carried out on cases referred by the Mysore and Kerala States in the State Forensic Science Laboratory, Madras?